## 2019 டிசம்பர் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of December 2019

| | | |
|---|---|---|
| 06th Dec<br>11:00AM – 1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 06th Dec<br>7:00PM – 9:00PM | சி.பி.எஸ். வருடாந்திர கிறிஸ்துமஸ் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 13th Dec<br>7:00PM – 9:00PM | கிறிஸ்து பிறப்பு பாடல் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 14th -19th Dec | கிறிஸ்துமஸ் பஜனை | அலைன் |
| 20th Dec<br>7:00PM – 9:00PM | கிறிஸ்துமஸ் மரவிழா & குடும்ப பாடல் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 25th Dec<br>5:00AM – 6:30AM | கிறிஸ்து பிறப்பு ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 27th Dec<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st Dec<br>11:30PM-12:30AM | நடுநிசி மற்றும் புதுவருட திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |

ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.

**050 586 8173 / 056 441 1225 / 050 482 1006**

### உள்ளே

ஆயர் மடல்

திருமறை தியானப்பகுதி

செயலரிடமிருந்து

மிஷனரி சுயசரிதை

கட்டுரைகள்

Youth Special

பாடல் பிறந்த கதை

**Children's Corner**

வேத வினா விடை போட்டி

பிறந்த நாள்

திருமண நாள்

தெரிந்து கொள்வோம்

## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் மருத்துவமனை வளாகம், அலைன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளிகிழமை | 6:15 PM | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

## ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
## Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |



Merry Christmas
May every moment in your life be a blessing.
May you be showered with love and care.



# ஆயர் மடல்...

அன்புக்குரியவர்களே,

காலங்காலமாய் தேவனுடைய வருகைக்காக, தேவனுடைய மனிதப்பிறப்பிற்க்காய் அநேகர் வேத அறிவோடு காத்துக்கொண்டிருந்தாலும், அவரது பிறப்பை அறியவில்லை அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை. மனித குல வரலாற்றில் இயேசு பிறந்ததை பேதைகளாகிய நாம், அறிந்து, உணர்ந்து, விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். இயேசுவுக்கு நாம் மிக நெருங்கிய சொந்தங்களாகி விட்டோம். இயேசுவுக்கு உடன் சுதந்திரவாளிகளாகி விட்டோம். இந்த ஆழமான சத்தியத்தை உணர்ந்து இந்த அட்வெந்து காலத்தையும், கிறிஸ்மஸ் காலத்தையும் உற்சாகத்தோடு கொண்டாட ஆயத்தமாகுங்கள். தேவையிலுள்ள ஏதாவது ஒரு குடும்பத்திற்கு உதவிக்கரம் நீட்டி, இயேசு உங்களுக்காகவும் பிறந்திருக்கிறாரென்று அறிவியுங்கள், கொண்டாடுங்கள்.

*May this season of Christmas bring Great Peace, joy & Prosperity in your Personal and Family lives.*

இப்படிக்கு உங்கள் ஆயர்,

*Rev. M. Christopher Rajendran.*

**MERRY X'MAS...! HAPPY X'MAS...!**

**HAPPY NEW YEAR**

**2020**

# திருமறை தியானப்பகுதி

**தமது முதற்பேறானவரை [இயேசுவை] உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள் என்றார்.**

**(When God brings the firstborn into the world, He says, “Let all God’s angels worship Him.”)**

அன்புக்குறியவர்களே!

ஆதிகாலமுதல் தேவன் மனிதனை ஆவலோடும், அன்புள்ளத்தோடும் நாடித்தேடி, பலவிதங்களில் தன்னை, தனது சித்தத்தை, தனது வல்லமையை வெளிப்படுத்தினார். அவ்வாறுத் தன்னை வெளிப்படுத்தும்பொழுது நேரடியாக தோன்றி வெளிப்படுத்தாமல், இயற்கை, தேவதூதர்கள், தீர்க்கதரிசிகள், ஊழியர்கள் மூலமாக தன்னை வெளிப்படுத்தினார். இறுதியில் தேவனே இயேசு கிறிஸ்துவில் முழுமனிதனாக, முழுதேவனாக XMAS அன்று கன்னிமரியாள், பரிசுத்த ஆவியானவர் மூலமாக பிறந்தார், வெளிப்பட்டார்.

Almighty God became Human on Christmas. The perfect Revelation of God completed in the Birth of Lord Jesus Christ. So, XMAS is the Birth of New Humanity, which is completely Divine. Lord Jesus is the first fruit of this New –Divine Person. His main task was to connect the Humanity with God Almighty.

தேவனோடு மனிதகுலத்தை இணைப்பதுதான் கிறிஸ்து பிறப்பின் நோக்கமாக இருக்கிறது. அதற்கு முன்பாக மனிதனை பரிசுத்தப்படுத்தி, தகுதிப்படுத்த வேண்டும், பக்குவப்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட உன்னதமான நோக்கங்களுக்காக, யாராலும் அணுக முடியாத இடத்தில் வாசம் செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து XMAS அன்று குழந்தையாக பிறந்தார். அவர் பிறப்பைப்பற்றி மரியாளுக்கு வெளிப்படுத்திய தேவதூதர் காபிரியேல். இயேசு பிறப்பின் நற்செய்தியை உலகுக்கு அறிவித்தவர்கள் தேவதூதர்கள், (Luke 2:8–15). Almighty God used Angelic being to bring good news, future events and revealing God’s messages to His people. இந்தப் பகுதியில் நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் இயேசுவைப்பற்றியது. அவர் எப்படிப் பட்டவர்?

Hebrews 1:4ன்படி இயேசு தேவதூதர் அல்ல, அவர்களிலும் மேன்மையானவர். Jesus is Superior than all other creations! எல்லாவற்றிற்கும் மேலாக

உயர்த்தப்பட்டவர்! பிலிப்பியர் 2:10,11 ன்படி இயேசுவின் நாமத்துக்கு வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்குக், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக, இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைப் பெற்றவர்.

Jesus is not created being…! Jesus is Self–Existent being and Supreme being…! Jesus has inherent Superiority*!* இந்த உயர்ந்த நிலை அவருக்கு இயற்கையாகவே இருக்கின்ற தெய்வீகமான உன்னத நிலை. திரியேக தேவன் என்ற நிலையில் (கொலோசெயர் 1:15–19)'ன்படி அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்.

Second Person in Trinity, Coequal person in God head…! இப்படிப்பட்ட இயேசுவுக்கு Human nature எடுக்க வேண்டிய முக்கியமான பொறுப்பு வந்தபொழுது Hebrews 2:9'ன்படி நம் ஒவ்வொருவருக்காகவும் இயேசு மரணத்தை ருசிபார்க்க வேண்டியிருந்தது, ஆதலால் தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்தார். Revelation 5:9ன்படி ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே இருந்த அந்த புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரையை உடைக்கவும் பாத்திரரானார். ஆதலால் Revelation 5:12 to 14 ன்படி மூவுலகோர் யாவரும் இயேசுவை தொழுதுகொள்ள பாத்திரரானார்!

Here Jesus has acquired Superiority…! (Resurrection, Ascension, Exaltation, Adoration), (Hebrews 1:6,8). சங்கீதங்கள் 2:7–12,45:6,7,97:7 ஏற்கனவே முன்னறிவித்துள்ளன. இயேசுவின் இரண்டாம் வருகையையும் சேர்த்தே முன்னறிவித்துள்ளன.

Jesus did not worship any Angelic beings. Angels worshipped Lord Jesus, because they are creatures, Lord Jesus is Creator. So, He deserved to get worship. So, Lord Jesus is God Almighty! God called Jesus as God in Hebrews 1:8. The heart of the message here is Jesus is God. God called Jesus God and said that He is enthroned in His Kingdom. Jesus has Sovereignty, Deity, Dynasty, integrity and authority. So, worship Jesus is good and make us better! XMAS என்றால் கிறிஸ்துவுக்கு ஆராதனை!

இந்த கிறிஸ்மஸ் காலத்தில் நம்முடைய கொண்டாட்டத்தின் மத்தியில் இயேசுவைப்பற்றிய இந்த சத்தியத்தை அறிவிப்போம்! முழு உள்ளத்தோடு அவரைத்தொழுதுகொள்ள அழைக்கும்

உங்கள் ஆயர்,
**Rev. M. Christopher Rajendran**

# செயலரிடமிருந்து…

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே…

உயர்ந்த மேன்மையை உதறிதள்ளி, மாட்டு கொட்டினில் பாலகனாய் மண்ணில் அவதரித்த இயேசுவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் அன்பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை சபை குழுவின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் பதினோரு மாதங்களை கடந்துவர கர்த்தர் நமக்கு உதவி செய்து நம் குடும்பத்த்தையும் பாதுகாத்து வழிநடத்தி நம் கையின் பிரயாசங்களை ஆசிர்வதித்த தேவாதி தேவனை நன்றி நிறைந்த உள்ளதோடு போற்றுவோம். ஆண்கள் சங்கம் சிறப்பு ஆராதனை, துதி ஆராதனை, சிறுவர் வேதாகம வகுப்புகளுக்கான தேர்வு இவையனைத்தும் நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபைக்கூர்ந்தார்.

பண்டிகை மதமாகிய இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம், குடும்பமாய் பங்குபெறுவோம்.


**மகிழ்ச்சி, சமாதானம், தேவாசீர்வாதம், தேவ கிருபை உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிரப்புவதாக.**

**இப்படிக்கு**
**அன்புடன் கிறிஸ்துவின் பணியில்**
**S. சுரேஷ் ராஜன்**



# இராபர்ட் கால்டுவெல்

## (1814-1891)



உலக வரலாற்றை மாற்றியமைத்ததில் நூல்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. காரல்மார்க்சின் மூலதனம் எனும் நூல் அவ்வகையில் அனைவராலும் போற்றப்படும் நூலாக உள்ளது. அதுபோலத் தமிழக வரலாற்றில் - தமிழ் வரலாற்றில் மிகப்பெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கிய நூல் எனில் அது இராபர்ட் கால்டுவெலின் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலாகும். அந்த நூலையும் அதன் ஆசிரியரான கால்டுவெல்லையும் மதிப்பதற்குக் காரணம் தமிழர்களின் உள்ளத்திலும், உலக அளவில் தமிழ்பற்றி ஆராய்ந்த அறிஞர்களின் உள்ளத்திலும் புதிய வெளிச்சத்தை அந்நூல் பாய்ச்சியமையே ஆகும்.

வடமொழியைத் "தேவ பாஷை' எனவும் தமிழை "நீச்சபாஷை' எனவும் தாழ்த்தி, தமிழ் இலக்கியங்கள் யாவும் வடமொழி வழிவந்தவை என நேராகவும் உரைகளின் வழியாகவும் வடமொழிச் சார்பாளர்கள் பதிவு செய்தனர். இக்காலகட்டத்தில் தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டி மொழித்துறையிலும், அரசியல் துறையிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய நூல் கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் ( 1856, 1875 ) எனும் நூல் ஆகும்.தமிழ்மொழி மிகச்சிறந்த செவ்வியல்மொழி எனவும் தமிழ்ச்சொற்கள் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீனில் இடம்பெற்றுள்ளன எனவும் தமிழ்மொழியிலிருந்து பிறந்தவையே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு மொழிகள் எனவும் இவையாவும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை எனவும் திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் திருந்தாத மொழிகள் என இருவகைப்படுத்தியும் தம் ஆய்வு முடிவுகளைக் கால்டுவெல் வெளிப்படுத்தியவர். தமிழ் வடமொழியின் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது என அழுத்தம் திருத்தமாகச் சான்று காட்டி நிறுவியவர். இதுநாள் வரை தமிழ்ப்பகைவரால் தமிழ் மீது பூசி மெழுகியிருந்த அழுக்குகளைத் துடைத்துப் பளிச்செனத் தமிழின் பெருமையை ஒளி பெறச்செய்ததால் கால்டுவெல் பெருமகனாரைத் தமிழ்உலகம் என்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளது.



கால்டுவெல்லின் வருகை கிறித்தவ மதப்பரப்புப் பணியை அடிப்படையாகக் கொண்டது. எனினும் கால்டுவெல் தமிழகத்தில் ஏறத்தாழ 53 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழி, வரலாறு, சமூக முன்னேற்றம், சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டதால் அவரின் வரலாறு அனைவராலும் அறியத்தகுந்த வரலாறாக அமைந்துள்ளது.கால்டுவெல் அவர்கள் அயர்லாந்து நாட்டில் உள்ள "கிளாடி' எனும்

ஆற்றின்கரையில் அமைந்த சிற்றூரில் பிறந்தவர்(1814). இளமையில் அறிவார்வம் கொண்ட தம் மகனை அழைத்துக் கொண்டு பெற்றோர் தம் தாய்நாடான ஸ்காட்லாந்துக்குச் சென்று "கிளாஸ்கோ' நகரில் வாழ்ந்தனர். 16 ஆண்டுக்குள் ஆங்கில மொழியில் அமைந்த பல இலக்கியங்களைக் கால்டுவெல் கற்றுத் தேர்ந்தார். தம் மகனைக் கவின்கலைக் கல்லூரியில் பெற்றோர் சேர்த்தனர். ஓவியக்கலையைக் கால்டுவெல் கற்றுத்தேர்ந்தாலும் அதனை வாழ்க்கைத் தொழிலாக்கிக் கொள்ளவில்லை.

கால்டுவெல் தம் இருபதாம் அகவையில் இறைப்பணி செய்வதற்காக இலண்டன் நகரில் அமைந்த சமயத்தொண்டர் சங்கத்தில் சேர்ந்தார். அச்சங்கத்தின் சார்பாகக் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்ந்து ஐரோப்பிய மொழிகளில் அமைந்த நூல்களையும் சமய நூல்களையும் கற்றார்.இதன் பயனாக இரண்டு ஆண்டுகளில் இளங்கலைப்பட்டம் பெற்றார். அவ்வாறு படிக்கும்போது கிரேக்கமொழியைப் பயிற்றுவித்த பேராசிரியர் டேனியல் ஸ்டான்போர்ட் அச்செம்மொழியின் பெருமையை மாணவர்களுக்கு நிறைவடையும்படிப் பயிற்றுவித்தார். கால்டுவெல் பெருமகனாருக்கு மொழியியலில் ஆர்வம் உண்டாக்கியது அப்பேராசிரியரின் வகுப்புரைகளே ஆகும்.

இலண்டன் சமயப்பரப்புக் கழகத்தின் சார்பாகச் சமயப் பணிக்கு என 1838ல் "அன்னமேரி' என்னும் கப்பலில் ஏறி இந்தியாவுக்குப் பயணம் செய்தார். கடலில் பயணம் செய்தபோது இவர் ஏறிவந்த கப்பல் மீது பிரெஞ்சு கப்பல் ஒன்று மோதிச் சிதைந்தது. பலர் மடிந்தனர். சிலர் உயிர் பிழைத்தனர். பழுதுற்ற கலத்தைப் "பிளிமத்' என்னும் துறைமுகத்தில் செப்பனிட்டனர். தென்னாப்பிரிக்கா வழியாகக் கப்பல் வரவேண்டியிருந்ததால் நான்கு மாதம் பயணம் செய்து சென்னைக்கு வந்தார். அவ்வாறு வரும்போது சி.பி. பிரௌன் என்னும் குடிமைப்பணி அதிகாரியுடன் நட்புகொண்டார். அவர் முன்பே ஆந்திராவில் பணி புரிந்ததால் தெலுங்கு, வடமொழி அறிந்து இருந்தார். அவர் வழியாகக் கால்டுவெல் அம்மொழிகளைக் கற்றார்.




கடலில் பயணம் செய்தபோது கால்டுவெல்லுக்கு முன்பு இருந்த இருமல் நோய் நீங்கியது. கால்டுவெல் சென்னைக்கு வந்ததும் "துருவர்'எனும் தமிழ்கற்ற அறிஞரைக் கண்டு மகிழ்ந்தார். வின்சுலோ, போப், பவர், ஆண்டர்சன் முதலானவர்கள் பின்னாளில் நண்பர்களாயினர்.சென்னை மாநகரில் மூன்று ஆண்டுகள் தங்கிய கால்டுவெல் ஏறத்தாழ நானூறு கல்தொலைவில் உள்ள திருநெல்வேலிக்கு நடந்து செல்லத் தீர்மானித்தார். நடந்து செல்லும்போது மக்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், மொழி முதலானவற்றை அறியலாம் என நினைத்தார். சிதம்பரத்தில் இருந்த நடராசர் கோயிலைக் கண்டு மகிழ்ந்தார். மயிலாடுதுறை வழியாகச் சென்று தரங்கம்பாடியில் சில நாள் தங்கினார். டேனிஷ் மின் செய்யும் பணிகளை அறிந்தார். பின்பு குடந்தை

வழியாகத் தஞ்சாவூர் சென்றார். பெரியகோயிலையும் மாராட்டிய மன்னர் அரண்மனையையும் கண்டு மகிழ்ந்தார். அங்கு வாழ்ந்த வேதநாயகரைக் கண்டு உரையாடினார். திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அழகையும் திருவரங்கச் சிறப்பையும் கண்டு மகிழ்ந்தார். பின்பு நீலமலை சென்றார். அங்கு ஸ்பென்சர் எனும் தந்தையாரைக் கண்டு அவரின் விருந்தினராக ஒரு மாதம் தங்கி இளைப்பாறினார்.

நீலமலையிலிருந்து இறங்கி, கோவை வழியாக மதுரை வந்தார். வரும் வழியில் மக்கள் அவரைப் பலவாறு இழித்தும், பழித்தும் பேசினர். ஒருநாள் நடந்து செல்லும்போது மழைவரத் தொடங்கியது. இரவுப் பொழுதில் தங்கிச்செல்ல நினைத்தார். சத்திரம், சாவடி உண்டா என வினவிய போது அரசின் சத்திரம் உள்ளது எனவும் அது ஆங்கிலேயர்க்கு இல்லை எனவும் கூறினர். மழையில் நனைந்து துன்பப்பட்ட கால்டுவெல்லைக் கண்டு மாட்டுத் தொழுவத்தில் தங்கும்படி சொன்னார்கள். சத்திரத்தில் இடம் கிடைக்காததாலும் மாட்டுத் தொழுவத்தில் தங்க மனம் விருபாததாலும் ஒரு வீட்டின் திண்ணையில் தங்கி இரவுப் பொழுதைக் கழித்தார்.


மதுரை வந்தடைந்த பின்பு திருமங்கலத்தில் சமயத்தொண்டு புரிந்த திரேசியர் அவர்களைக் கண்டு உரையாடினார். பின்பு நெல்லை வழியே பாளையங்கோட்டை சென்றடைந்தார் (நவம்பர் 1841). பின்பு நாசரேத்தில் (நவம்பர் 28) தங்கி இறைவழிபாடு நிகழ்த்தி ஒரு விரிவுரையும் செய்தார்.பின்பு முதலூரில் ஞாயிற்றுக்கிழமை விரிவுரையயான்று நிகழ்த்தினார். அருகில் இருந்த இடையன்குடியைப் பாதை தெரியாமல் நெடுந்தூரம் சுற்றி அடைந்தார். அந்த ஊரே அவர் பணிபுரியும் இடமாகவும், கடைசிக் காலத்தில் நிலைகொள்ளும் இடமாகவும் அமைந்தது.இடையன்குடி என்பது பெரும்பாலும் பனைமரங்கள் நிறைந்த பகுதியாகும். கூரைவீடுகளே மிகுதி. கள்ளியும் முள்ளியும் நிறைந்த பகுதி. அங்குக் கால்டுவெல் குடியிருப்புகளையும் கோயிலையும் உருவாக்கினார். எழுதவும் படிக்கவும் மக்களுக்குக் கற்றுத் தந்தார். அப்பகுதியில் வாழ்ந்த நாடார் இன மக்களைக் கல்வியறிவுப் பெற்றவராக மாற்றினார்.1847ல் அங்கு ஆலயப்பணியைத் தொடங்கி 32 ஆண்டுகளுக்குப் பிறகு 1880-இல் அப்பணி நிறைவுற்றது. சென்னை மாநில ஆளுநராக இருந்த நேப்பியார் அவர்கள் கால்டுவெல்லின் திருப்பணிகளைக் காண விரும்பி இடையன்குடியில் ஒருவாரம் தங்கினார். 500 உருபா அன்பளிப்பாக வழங்கியதையும் அறியமுடிகிறது.


A COMPANION

HOLY COMMUNION.

MADRAS:

இடையன்குடியில் மூன்று மாதம் இளவேனில் காலமாகவும் 9 மாதம் கடும் வெப்பம் நிறைந்த காலமாகவும் விளங்கும். இடையன்குடியில்



A

COMPARATIVE GRAMMAR

OF THE

DRAVIDIAN

OR

SOUTH-INDIAN FAMILY OF LANGUAGES.

BY THE

REV. ROBERT CALDWELL, D.D., LL.D.,

Second Edition, Revised and Enlarged.

LONDON:

TRÜBNER & CO., LUDGATE HILL.

1875.

[All rights reserved.]

வாழ்ந்தபோது வெப்பம் தாளாமல் கால்டுவெல் துன்பப்பட்டுள்ளார். அக்காலங்களில் தமிழ் இலக்கியங்களின் பக்கம் கால்டுவெல்லின் கவனம் திரும்பியது. திருக்குறள், சீவகசிந்தாமணி, நன்னூல் முதலிய நூல்களைக் கற்றார். உடல் வெப்பம் தணிக்க அருகே உள்ள கடற்கரையில் உவரி என்னும் காயல்பகுதிக்குச் சென்றார். உவரித்துறை பழம்பெருமை வாய்ந்ததை உணர்ந்தார். அங்கிருந்த இளஞ்சுனையில் வெயிற்காலத்தில் தங்கி வாழ்ந்தார். கோடைக் காலங்களில் திருக்குற்றாலம், அசம்புமலை, கொடைக்கானல் மலைகளில் தங்கியிருந்துள்ளார்.

கால்டுவெல் "தமிழில் கிறித்தவ வழிபாட்டு நூல்' உருவாக்கும் குழுக்களில் இடம்பெற்று அப்பணியைச் சிறப்புடன் செய்துள்ளார்.மேலும் கிறித்தவ மறைநூலை மொழிபெயர்க்கும் பன்னிருவர் குழுவில் இடம்பெற்றுத் திறம்படப் பணியாற்றியுள்ளார். கால்டுவெல் தமிழகத்தின் திருநெல்வேலி பற்றி, அயல்நாட்டவரின் குறிப்புகளைக் கொண்டு வரலாற்று நூல் எழுதியுள்ளார். பழைய ஈபுரு மொழியில் வழங்கும் துகி என்னும் சொல் தமிழின் தோகை என்னும் சொல்லின் திரிபு எனவும், அரிசி என்பது கிரேக்க மொழியில் அருசா என வழங்குவதையும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.



கொற்கைத் துறைமுகம் பற்றிய ஆய்வுகளையும் கால்டுவெல் செய்துள்ளார். கொற்கையின் அருகே இருந்த அக்கசாலை (பொற்காசு செய்யும் இடம்) என்ற ஊரின் சிறப்பு அறிந்து மகிழ்ந்தார். மேலும் கொற்கையின் அகழா 'ய்வுப் பணியைத் தம் சொந்த முயற்சியில் செய்துள்ளார். ஆறடிக்குகீழ் மணற்பாறையும், அதன் பிறகு கடற்கரைக் குறுமணலும் கடல்சங்கும் சிப்பிகளும் மூழ்கிக் கிடந்ததை உலகிற்கு வெளிப்படுத்தினார். இன்றுள்ள கொற்கைக்கு அப்பால் 5 கல்லில் கடல் உள்வாங்கி உள்ளது என்று குறிப்பிட்டார். பழங்காயல் என்னும் ஊரையும் ஆய்வு செய்தார். இவ்வூரும் பண்டைய கடற்கரைத் துறைமுகமாக இருந்திருக்க வேண்டும் என உணர்ந்தார்.

மேலும் மகாவம்சம் முதலான நூல்களின் துணைகொண்டு ஈழத்தமிழக உறவுகளையும் கால்டுவெல் எழுதியுள்ளார்.பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய மொழிகள் பற்றிய பலகட்டுரைகளை மேல்நாட்டு அறிஞர்கள் எழுதினர். அவ்வகையில் பழந்தமிழ்ச்சொற்களைப் பழங்கன்னடச் சொற்களோடும் பழைய தெலுங்குச் சொற்களோடும் கால்டுவெல் ஒப்புநோக்கிய போது அடிச்சொற்கள்

ஒத்திருப்பதைக் கண்டார். ஏறத்தாழ 15 ஆண்டுகள் கடுமையாக உழைத்துத் தென்னிந்திய மொழிகளுக்கு இடையே உள்ள உறவுகளை ஒப்பிட்டுத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலைத் தந்தார். தென்னிந்திய மொழிக் குடும்பத்தில் 6 மொழிகள் திருந்திய மொழிகள் எனவும் 6 மொழிகள் திருந்தாத மொழிகள் எனவும் குறிப்பிட்டார். மேலும் வடசொற்களை அகற்றினாலும் தமிழ்மொழி வளம் குன்றாது தழைத்து இனிது வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கால்டுவெல்லின் பணிகளைக் கண்ட கிளாஸ்கோ பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. கால்டுவெல்லின் ஆய்வுகளில் மொழி ஆய்வு அனைவராலும் போற்றப்படுகிறது. அவர்தம் காலத்தில் தொல்காப்பியம் முதலான நூல்கள் பதிப்பிக்கப் படாததால் கால ஆய்வுகள் குறித்த இவர் செய்திகளில் பிழையுள்ளதை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இராபர்ட் கால்டுவெல்லின் மொழி ஆராய்ச்சிப் பணிகளை மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் தம் நூல்களில் வாய்ப்பு அமையும் இடங்களில்எல்லாம் நன்றியுடன் போற்றி மதித்துள்ளார்.""திராவிடம் வடமொழிச் சாற்பற்றதென்றும், உலக முதன்மொழிக்கு மிக நெருங்கியதென்றும், வடசொல்லென மயங்கும் பலசொற்கள் தென்சொற்களேயயன்றும், வடமொழியில் பல தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளனவென்றும், முதன்முதல் எடுத்துக்காட்டி, மொழிநூற் சான்றுகளால் நிறுவியவர் கால்டுவெல் கண்காணியரே...

இவர் தமிழ்மொழியைச் சிறப்பாய் ஆராய்ந்தது போன்றே மலையாள மொழியைச் சிறப்பாயாராய்ந்தவர் டாக்டர் குண்டட் ஆவர். இவ்விருவர்க்கும் திராவிடவுலகம், விதப்பாய்த் தமிழுலகம் பட்டுள்ள கடன் மாரிக்குப்பட்டுள்ளதேயயனினும் பொருந்தும் ""(ஒப்பியன் மொழிநூல், ப.84), எனவும் "....தமிழ் என்பதன் திரிபே திராவிடம் என்பது புலனாம். ஆயினும் கால்டுவெலார் இவ்வெளிய முறையில் உண்மையைக் காணாமல், இயற்கைக்கு மாறாகத் தலைகீழாய்நோக்கி, திராவிடம் என்னுஞ் சொல்லே தமிழென்று திரிந்ததாக முடிவு செய்துவிட்டார்." (தமிழ்வரலாறு, ப.33) எனவும் "கால்டுவெல் ஐயர் கடைப்பிடித்த கொடிவழி மொழிநூலையே கையாளல் வேண்டும்' (த.இ.வ. ப. 48) எனவும் பாவாணர் குறிப்பிடுவார்.




கால்டுவெல் அவர்கள் 18 மொழிகளைக் கற்றவர். பல்வேறு வரலாற்று நூல்களையும் இலக்கியங்களையும் கற்றவர். சமய அறிவு நிரம்பப்பெற்றவர். எனவே தம் அறிவு முழுமையும் பயன்படுத்தி மொழி நூலையும் வரலாற்று நூலையும் சமய நூலையும் உருவாக்கித் தமிழர் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றவர். இவர் இயற்றிய திருநெல்வேலி சரித்திரம் என்னும் நூல் அக்காலத்தில் இருந்த போர்ச்சுகீசிய, டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டில் நிலைகொண்டு வாழ்வதற்குச் செய்த முயற்சிகளை 'யயல்லாம் மிகச்சரியாகப் பதிவு செய்துள்ளது.அக்காலத்தில் இருந்த படைத்தளபதிகள், சமயத் தொண்டர்

'கள் எழுதிய மடல்கள், நூல்கள், குறிப்புகள், வாய்மொழிச் செய்திகள், அகழாய்வுச் செய்திகள் இவற்றைத் துணைக்கொண்டு வரலாற்று நூலை எழுதியுள்ளார்.

கால்டுவெல் தம் 29ஆம் அகவையில் நாகர்கோவிலில் வாழ்ந்த மால்ட் என்பவரின் மகளான எலிசா (21 அகவை) என்னும் மங்கையை மணந்தார். எலிசா ஆங்கிலமும் தமிழும் நன்கறிந்தவர்.இடையன்குடியில் பெண்கள் கல்விபெற எலிசா பணிபுரிந்தவர். பிணியுற்றவர்களுக்கு மருத்துவம் பார்த்தார்.எலிசா வழியாகக் கால்டுவெல் பேச்சுத் தமிழைக் கற்றார். கால்டுவெல்லுக்கு மூன்று மக்கள் எனவும் நான்கு மக்கள் எனவும் கருத்து வேறுபாடு உண்டு. அம்மக்களுள் ஆடிங்கிதன் (puddஷ்ஜஆமிலிஜ) என்பவர் மருத்துவராகப் பணிபுரிந்தவர். முதல் மகள் திருச்சியில் "வியத்தர்' என்பவரை மணந்தாள். இளைய மகள் "லூயிசா' ஆங்கிலப்படை வீரனை மணந்தாள். எனினும் (28-10-1872இல்) மறைந்தாள்.கால்டுவெல் வாழ்க்கை எளிமையானது.பெரும்பாலும் நடந்து செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஊர்களில் கிடைக்கும் காய்கனிகளை உண்டு வாழ்ந்தார். வெயில் கொடுமைக்கு அஞ்சி கூரைவீடுகளில் தங்கியிருப்பார். அமர்ந்து படிப்பார். காலை மாலை உலாவுவார். மூட்டைப்பூச்சிகளுக்கு அஞ்சி இரவில் பனைநாற்கட்டிலில் வீட்டு முற்றத்தில் உறங்குவார். பெரும்பான்மையான நாள்களில் சுற்று வட்டாரத்தில் சமயப்பணி புரிந்துவிட்டு ஏழாம்நாள் இடையன்குடி வருவார். தாம் பணி செய்த பகுதிகளில் 1877ஆம் ஆண்டு ஏற்பட்ட தாதுவருடப் பஞ்சத்தில் வாடிய மக்களுக்குப் பேருதவி செய்தார்.கால்டுவெல் தமிழகத்தில் தங்கியிருந்தபோது மூன்றுமுறை தம் நாடு சென்று வந்துள்ளார். (1.1854-57, 2.1873-75, 3.1883-84).



கால்டுவெல் திருநெல்வேலி ஆயராக கி.பி. 1877-இல் திருநிலைப்படுத்தப் பட்டார். 1891 சனவரியில் 31-ஆம் ஆண்டு தம் பணியிலிருந்து ஓய்வுபெற்றுக் கொடைக்கானல் சென்று தங்கியிருந்தார். அக்காலங்களில் கொடைக்கானல் செல்ல சரியான பாதை வசதியில்லை. அம்மை நாயக்கனூரில் இருந்து கடும் பாறை வழியாகச் சென்றார். ஒருநாள் குளிரால் நடுக்கம் கொண்டார். ஏழாம்நாள் நோய் வலுவுற்று 1891 ஆகத்து மாதம் 28-ஆம் நாள் இயற்கை எய்தினார். அவர்தம் உடல் இடையன்குடிக்குக் கொண்டுவரப்பட்டு அவர் எடுப்பித்த கோயிலில் அடக்கம் செய்யப்பட்டது. கால்டுவெல் பெருமகனார் தம்மைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ""நான் அயர்லாந்து தேசத்தில் பிறந்தேன்; ஸ்காட்லாந்து நாட்டில் வளர்ந்தேன். ஆங்கில நூல்களில் ஆழ்ந்தேன். எனினும் என்வாழ்நாளில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்தியப்பெருநாடும், அந்நாட்டு



மக்களுமே என் கருத்தை முழுவதுமாகக் கவர்ந்துகொண்டதால் நான் இந்தியர்களுள் ஒருவனாயினேன். இந்தியர்களுள் ஒருவராக இருந்தாலும் தமிழர்களின் புதிய வரலாற்றுக்கு மூலநூல் தந்ததால் தமிழ் பற்றிப் பேசும்பொழுதெல்லாம் கால்டுவெல் பெயரை நம் உதடுகள் ஒலிக்கும்.

---

**CHRISTMAS IS THE SPIRIT OF GIVING; WITHOUT A THOUGHT OF GETTING.**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

*Your name / Quiz type / Month-Year*

***Church Email: csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# “இயேசு கிறிஸ்து” எதற்காக உலகத்திற்கு வந்தார்...?

***இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவும்:*** பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது.(1தீமோத்தேயு 1:15) இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். (லூக்கா 19:10)

***ஊழியம் செய்யவும் ஜீவனை கொடுக்கவும்:*** அப்படியே, மனனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊிழயஞ்செய்யவும், அனே கரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.(மாற்கு 10:45)

***பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படியாக:*** ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (1 யோவான் 3:8)

***பாவிகளை மனந்திரும்புவதற்கு அழைக்க:*** பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டி யதில்லை: நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்க அழைக்க வந்தேன் என்றார். (மாற்கு 2:17)

***தேவனுடைய சித்தத்தை செய்து முடிக்க:*** என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன். (யோவான் 6:38)

***நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற:*** நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரியனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன.(மத்தேயு 5:7)

***உலகத்தை நியாயத்தீர்ப்பு செய்ய:*** அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும் படியாகவும், காண்கிறவர்கள் குருடாகும் படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன என்றார். (யோவான் 9:39)

***தேவனுடைய அன்பை வெளிப்படுத்த:*** நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் சம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய

பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதாலே அன்பு உண்டாயிருக்கிறது. (1யோவான் 4:10)

***தேவனைக் குறித்து பரசங்கிக்க:*** அவர்களை அவர் (இயேசு) நோக்கி: அடுத்த ஊர்களிலம் நான் பிரசங்கம் பண்ணவேண்டு மாதலால், அவ்விடங்களுக்கு போவோம் வாருங்கள்: இதற்காகவே பறப்பட்டு வந்தேன் என்று சொல்லி; கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளை துரத்திக்கொண்டும் இருந்தார். (மாற்கு 1: 38 & 39)

***பரிசுத்த ஆவியானவர் நம்மோடு வாசம் பண்ண:*** நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழது என்றென்றைக்கம்உங்களுடனே கூட இருக்கும் படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தரளுவார். (யோவான் 14:16)

***உலகத்தின் ஒளியாக:*** என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனு ‘ம் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்துள்ளேன். (யோவான் 12:46)

***புத்திர சுவிகாரத்தை அடையும் படி:*** நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிர மாணத்திற்கு கீழானவருமாகிய தம்மடைய குமாரனை தேவன்அனுப்பினார்.(கலாத்தியர் 4:4 & 5)

ஆம் உடன் விசுவாசிகளே…! நம்மை தம்மிடமாய் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாய் தம்முடைய நேசக்குமாரனையே நமக்காக இவ்வுலகத்திற்குத் தந்த பரம பிதாவுக்காக நாம் என்ன செய்கிறோம்? செய்யப் போகிறோம்?.

## சிந்திப்போம்..! செயல்படுவோம்..!!




*Article by Mr. M. Nesamony*

# சீர் கெட்ட பூமியில் சீரான குடும்பம்

நோவாவைக் குறித்து நமக்கு பலதகவல்களைத் தரும் வேதம். அவருடன் இணைந்து போகும் அவருடைய மனைவியைக்குறித்து அதிகம் பேசவில்லை. ஆயினும் 950 வருடம் வாழ்த நீதிமானாகிய மனிதன் ஒருவனோடு இவளும் நீண்ட காலம் வாழ்திருக்க வேண்டும் (ஆதி 6:9). அவன் தேவனோடு சஞ்சரித்து வந்ததற்க்கு இவளுடைய ஒத்துளைப்பு எத்தனையோ இருந்திருக்க வேண்டும். தேவக்கட்டளையைத் தலைமேல் கொண்டு ( ஆதி 6:22) கிட்டத்தட்ட 1,35,560 ஆடுகளை ஏற்றிசெல்லக் கூடிய பெரிய பேளையை இயந்திரங்கள் இல்லாத நாட்களில் உருவாக்கின நோவாவிற்க்கு அவள் எத்தனையாய் துணை நின்றிருக்க வேண்டும்.

கூடவே, மூன்று கீழ்ப்படிவான பிள்கைளும் , தகப்பனுடைய தரிசனத்தை நிறைவேற்ற இணைந்து செயல்பட்ட குமாரர்களை அவள் எத்தனை கரிசனையாய் வளர்த்திருக்க வேண்டும். அவர்கள் திருமணம் செய்த பெண்களிடத்தில் எத்தனையாய் அன்போடு நடந்துகொண்டு, குடும்ப ஒற்றுமையாய் இணைக்கும் பாலமாய் செயல்பட்டிருக்க வேண்டும் என்பதை நினைக்கும் போது இவளின் மாபெரும் சாதனைகள் சிறப்பாய் தெரியும்.

தன் புருஷனுக்கு தேவன் தந்த பணியினையோ கட்டளைகளையோ அவள் கேள்வி கேடடதேயில்லை. மாறாக தேவமனிதர் இவர் தேவ ஆலோசனையை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. நிரம்பி வழியும் பூமியில் (ஆதி6:1) தேவனுக்கு பிரியமற்ற இனச்சேர்க்கையினால் பொல்லாத ஆவிகளின் ஈடுபாடுகளினாலும் தங்களை கெடுத்துகொண்ட பெண்கள் நிறைந்த உலகில் (ஆதி 6:2,4) இராட்சதரர்களை உருவாக்கி உலகிற்க்கு அழிவைக் கொண்டுவரக் காரணமாயிருந்த பெண்களைக் கொண்ட பூமியில், தொடாச்சியாக இருதயத்தின் நினைவுகளின் பொல்லாதவைகளை நினைக்கும் பூமியில், தேவனே மனம் சலித்துபோய் இருந்த வேளையில். கொடுமையினால் நிறைந்த உலகில். துங்களை தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளக் கூடியப் பாத்திரங்களாக குடும்பமாக தங்களைக் காத்துக்கொண்ட இந்த தம்பதியர் எத்தனை விசேஷமானர்கள். தேவனே அவர்களோடு ஒரு உடன்படிக்கை செய்ய வாஞ்சிக்கும் அளவுக்கு பயபக்கியுள்ள குடும்பமாகத் தன்னைக் காத்துக் கொண்டவர்கள் இவர்கள் (ஆதி6:18). அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகில் (2 பேதுரு 2:5) நீதியை பிரசங்கித்த ஊழியக்காரரின் மனைவியின் பங்கையும் மறக்க முடியாது.

இத்னைபட பெரிய வேலையைச் செய்வதற்க்கு தங்களுக்கு பெலன் உண்டா? என்ற கேள்வி எழவில்லை. விசுவாசம் மேலோங்கி நிற்க்கும்

வாழ்வில் இது இலகுவானதே (எபி 11:7). அத்தனை மிருகங்களோடு கூட பறவைகளோடு கூட ஒரு வருடம் பேழைக்குள் வாழ்வதற்க்கு அக்குடும்பத்திற்க்கு எத்தனை பொறுமை, மற்றும் தாங்கும் சக்தி இருந்திருக்க வேண்டும். எத்தனை விதமான பறவை மிருகங்களை கண்காண்க்க அவர்களுக்கு எத்தனை கஷ்டங்கள் இருந்திருக்க வேண்டும். இவைகள் அனைத்தும் பொறுமையோடு சகித்து அவர்களின் உற்ற உறுதுணைாக இருந்த நோவாவின் மனைவியும் இவர்கள் குடும்பமும் வாழ்க. இன்று பூமியில் விதைப்பும் அறுப்பும் சீதனமும், உஷ்ணமும், கோடை காலமும் மாரிக்காலமும், பகலும் இரவும் ஒழியாமல் இருப்பதற்க்கு இருந்த இந்த பக்தியுள்ள குடுமபம் வாழ்க!

- **நெல்சன் சோபித ராஜ்.**

---

***பிறக்க இடமின்றி ஒவ்வொரு கதவாகத் தட்டிய படியே..***
***வருகிறான்....***

***திறந்து வைப்போம் நம் மனக் கதவுகளை...!***

***மீண்டும் பிறக்கட்டும் மனிதம் -நம் மனங்களில்.....!***


***எது எது நம்மைப் பிரிக்குமோ அவற்றை மறப்போம்;***
***எவை எவை நம்மை இணைக்குமோ அவற்றை நினைப்போம்***

***இனியக் கிறிஸ்து பிறப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்....!***




# FAMOUS PERSONS WHO FAILED BEFORE SUCCESS

## Michael Jordan




Michael Jordan once said, "I've missed more than 9,000 shots in my career. I've lost almost 300 games. 26 times, I've been trusted to take the game-winning shot and missed. I've failed over and over & over again in my life. And that is why I succeed." Today, Jordan is considered one of the greatest basketball players of all time, with career stats including 6,672 rebounds, 5,633 assists, and 32,292 total points, according to NBA.com.

## Albert Einstein



Today the word "Einstein" is synonymous with genius, but young Albert didn't speak fluently until he was nine years old, causing teachers to think he was slow. He was expelled from school for his rebellious nature and was refused admittance to the Zurich Polytechnic School. He went on to revolutionize science's understanding of the world, taking physics beyond its Newtonian view by developing the theory of General Relativity. He won the Nobel Prize.


HOW MANY TIMES SHOULD YOU TRY?
by Anna Vital
3 times Steven Spielberg was rejected by University of Southern California, after which he dropped out to become a director
25 times Tim Ferris's book *The 4 Hour Work Week* was rejected by publishers
400 times Richard Branson launched companies before he founded one 'out of this world' [Virgin Galactic]
300 times founder of Pandora.com approached investors before he got funding
162 times the author of this infographic made searches for this data
1009 times Colonel Sanders who just started KFC was turned down when he tried selling his fried chicken recipe
1500 times Sylvester Stallone was rejected when he tried selling his script and himself as the film 'Rocky'
Funders and Founders
5126 times James Dyson created failed prototypes of his vacuum cleaner before succeeding
10000 times Thomas Edison created failed prototypes of his electric bulb before succeeding
HOW MANY TIMES WILL YOU TRY?




கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை நீங்கள் சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள் அதை எழுதி அனுப்புங்கள்/தெரியப்படுத்துங்கள். கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.

# பாடல் பிறந்த கதை





இந்த பாடலை இயற்றியவர் நெய்யூரை சார்ந்த யோசேப்பு என்பவர். இவர் தன் சிறுவயதிலேயே தன் தாய் தந்தையரையும், உடன் பிறந்தோரையும் இழந்து அனாதையானார். தன் குடும்பத்தை இழந்து தனிமையின் துன்பத்தில் வாழ்ந்த இவர் தனக்கு ஆதரவாக கர்த்தரை ஏற்று கொண்டார். அது முதல் கர்த்தரை தன் சொந்த தந்தையாக நினைத்து, தனக்கு ஓர் உறவு இன்னும் இருக்கிறது என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்தார். இவர் இயற்றியை இந்த பாடலை படித்து பார்த்தால் இவர் கர்த்தரை எவ்வளவு நேசித்துள்ளார் என்பது புரியும்.

இந்த பாடல் பைபிளில் உள்ள 23ஆம் சங்கீதத்தை கருவாக கொண்டிருக்கிறது. தாவீது 23ஆம் சங்கீதத்தில் 'கர்த்தர் என் மேய்ப்பர்' என்று பாடியிருப்பார். ஆனால் நெய்யூர் யோசேப்பு 'கர்த்தர்' என்பதற்கு பதிலாக 'தேவபிதா' என்று கர்த்தரை உரிமையோடு தந்தையாக அழைத்து பாடியிருக்கிறார். இந்த பாடல் ஓர் தலைசிறந்த, பழமையான, எழில் கொஞ்சும் கிறிஸ்தவ கீர்த்தனையாக அமைந்துள்ளது. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஓர் அழகிய பாடல்.

இங்கிலாந்தில் இருந்து இயேசுநாதரின் நற்செய்தியை அறிவிக்க வந்தவர் ஜெசிமன் என்ற ஆங்கிலேயர். இவர் பச்சைமலை, கொல்லிமலை ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு இயேசுவை பற்றி அறிவித்து வந்தார். மொழி தனக்கு இடராக இருப்பதை அறிந்த இவர், தமிழை கற்றார். தமிழை அறிந்த பின் இவருக்கு நெய்யூர் யோசேப்பு இயற்றிய 'தேவபிதா' பாடல் மிகவும் பிடித்துவிட்டது. வெளிநாட்டவரையும் கவர்ந்திழுத்தது தான் இந்த பாடல். கொல்லிமலை பகுதியில் சுவிசேசத்தை அறிவித்து வந்த ஜெசிமன் ஒரு முறை ஜுரம் கண்டு மறைந்தார். அந்த பகுதியிலேயே அவரை அடக்கம் செய்தனர். அடக்க நிகழ்வின் போது, கொல்லிமலை பழங்குடி மக்கள் அவருக்கு பிடித்த 'தேவபிதா எந்தன் மேய்ப்பன்' என்ற இந்த பாடலையே கண்ணீர் மல்க பாடினர்.


இந்த பாடலில் நெய்யூர் யோசேப்பு தன்னை இயேசுவின் மந்தையின் கீழுள்ள ஒரு ஆடாக பாவித்து பாடியுள்ளார். திரியேகரை சொந்த தந்தையை போல அழைத்து அழகாக பாடியுள்ளார். நல்ல மேய்ப்பன் வலைதடியாலும் கோலாலும் தன்னை அதட்டி நேர்த்தியான பாதையில் சுகமாய் நடத்தி செல்வதாகவும், பசும் புல்வெளிகளும், அமர்ந்த தண்ணீரும் உள்ள இடங்களுக்கு தன்னை அழைத்து சென்று மேய்ப்பதாக பாடுகிறார். இருள் நிறைந்த இடங்களில், பள்ளங்களில் செல்லும் போது, 'நல்ல மேய்ப்பன்' உடன் இருப்பதால் பயப்படமாட்டேன் என்கிறார். பகைவர்களான ஓநாய்களிடம் இருந்து தன்னை காத்து கொள்கிறார் என்றும், இறுதிவரை அவரது மந்தையிலேயே நிலைத்திருப்பேன் என்றும் பாடுகிறார்.




**"Jingle Bells" was originally a Thanksgiving song"**

Turns out, we didn't originally go dashing through the snow for just Christmas. James Lord Pierpont wrote a song called "One Horse Open Sleigh" and performed it at his church's Thanksgiving concert originally. Then in 1857, the song was re-published under the title it still holds today, and it eventually became one of the most popular Christmas songs.

## Cartoon of the Month




## Parents… narrate the story to ur kid…





# Kids Coloring (Kinder & Beginner)




# MERRY CHRISTMAS



Dear Kids... Write your name... here...

# Beginner



"Christmas means giving. The Father gave His Son, and the Son gave His life. Without giving there is no true Christmas, and without sacrifice there is no true worship."

# Beginner & Primary)

## CHRISTMAS MISSING LETTERS IN WORDS 1

Write the missing letters in the boxes to complete the Christmas vocabulary



S_nt_ Cl_ _s

t r_ _



r_ _n d_ _r





s l_ _g h



f_r_pl_c_

st_ck_ng



p r_s_n t s





ch_m n_y



c_r d s

_rn_m_n t s



l_g h t s





b_l l



w r_ _t h

st_r





h_l l y





r_b b_n

# Bible Cross Word (Primary & Above)




*Your Name Please...*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# (Primary & Above)

## CHRISTMAS VOCABULARY WORD SEARCH PUZZLE 1

Find and circle the words in the word search puzzle and number the pictures

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| h | o | l | l | y | v | a | v | t | r | e | e | o | u | c |
| c | k | i | h | g | c | h | i | m | n | e | y | c | a | l |
| f | e | k | i | b | p | m | w | w | j | f | o | m | s | e |
| i | o | r | s | q | g | g | u | r | f | h | o | w | l | h |
| r | b | s | t | a | r | e | r | e | i | n | d | e | e | r |
| e | v | n | t | f | l | p | r | a | l | w | b | m | i | c |
| p | b | e | l | l | i | g | h | t | s | k | m | f | g | p |
| l | h | h | x | i | q | f | w | h | w | c | h | k | h | r |
| a | l | o | r | n | a | m | e | n | t | s | r | p | r | e |
| c | v | h | q | x | y | h | m | g | i | m | z | b | u | s |
| e | c | c | z | a | i | u | l | i | p | n | h | r | d | e |
| u | r | s | t | o | c | k | i | n | g | y | j | h | e | n |
| x | a | f | y | l | f | j | c | a | r | d | s | m | i | t |
| w | l | r | i | b | b | o | n | b | i | z | e | p | g | s |
| t | p | u | t | s | a | n | t | a | c | l | a | u | s | r |

1. Santa Claus
2. tree
3. reindeer
4. sleigh
5. fireplace
6. stocking
7. presents
8. chimney
9. cards
10. ornaments
11. lights
12. bell
13. wreath
14. star
15. holly
16. ribbon



















# December'19 Children's Quiz (Primary & Above)

**FROM THE BOOK OF GOSPELS**
**(Referred from NIV BIBLE)**

1. What is the meaning of Jesus?
   a) Protector b) Savior c) Provider
2. Which Old Testament prophet had the most to say about the birth of Christ?
   a) Isaiah b) Hosea c) Joel
3. Which emperor ordered all the young children be killed?
   a) Emperor Augustus b) Emperor Herod c) Emperor Claudius
4. What is the name of the priest who was told he would not die until he saw the Savior?
   a) Paul b) John c) Simeon

**COMPLETE THE VERSE AND QUOTE THE REFERENCE:**
**FROM ST. JOHN CHAPTER 1-3**

5. "For God so _________ the world that he gave his _____ and ________ ___________ _______ , that whoever ______________ in him shall not perish but have ___________ ________ ".

6. "The ________ became flesh and made his dwelling among us. We have seen his ________ , the _________ of the one and only Son, who came from the Father, full of ________ and __________."

7. " The true _________ that gives ________ to everyone was coming into the _________."

**8. What do you mean by Christmas? & Who is Jesus to u?**

**Last Month Children's Quiz Correct Answers: Nov 2019**

**From the Book of I Tim : 1-6**

1) c) Ephesus (1:3)

2) a) Hymenaeus and Alexander (1:20)

3) c) life, doctrine (4:16)

4) b) 60 years (5:9)

5) a) Elders who direct the church (5:17)

6) God, mediator, Christ Jesus (2:5)

7) quietness, full submission (2:11)

8) godliness, great (3:16)

9) money, evil (6:10)

**10) Command those who are rich in this present world not to be arrogant nor to put their hope in wealth, which is so uncertain, but to put their hope in God, who richly provides us with everything for our enjoyment. Command them to do good, to be rich in good deeds, and to be generous and willing to share. (6:17& 18)**

## Kids who did the Coloring

Hartlyn Herchil / Crasslin Devona
Rishon Yojit / Ridhun Yojit / Reagan Shan
Johan Sanjo / Jason Eric / Eion Jayden
Jonathan / Jeremiah / Jemima

## Children who successfully did the Bible Word Search

Roshan, Ridhun, Shelbino, Johan Sanjo, Jason Eric
Eric Jaden, Joshua, Jonathan, Jeremiah

## Children who successfully did the Bible Cross Word

Roshan, Shelbino, Annlin,
Angelin, Eric Jayden, Joshua, Jonathan

## Children who wrote Children's Quiz Correct Answers:

Roshan, Shelbino, Dennis, Annlin,
Angelin, Joshua

# வேத வினா-விடை போட்டி
## (எசேக்கியேல் 46–48, தானி: 1–7)

1. தகனபலியாக கர்த்தருக்கு எதை படைக்க வேண்டும் எப்போது படைக்க வேண்டும் ?

2. தேசத்தை சுதந்தரிக்கும்படி கர்த்தர் யோசேப்புக்கு கொடுத்த பங்கு வீதம் என்ன ?

3. வழி தப்பி போகாத ஆசாரியர்கள் யார் ?

4. கர்த்தருடைய ஆலயத்தின் பாத்திரங்களை நேபுகாத்நேச்சார் எங்கு கொண்டு வைத்தான் ?

5. நேபுகாத்நேச்சாரால் அவசரமாய் பிறந்த கட்டளையை தானியேல் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான் ?

6. சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களை செங்கற் சூளையிலே போடும்படி ராஜா யாரை ஏற்படுத்தினான் ?

7. நேபுகாத்நேச்சார் எதினால் மனுஷனின்று தள்ளப்பட்டு ஆடுமாடுகளைப் போல் ஆனான் ?

8. பாபிலோன் ராஜா பெல்ஷாத்சார் விழுந்த பிறகு தோன்றிய ராஜ்ஜியங்கள் எது ?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

| 1. எசேக் 45: 25 | 2. 44: 17 & 18 | 3. 43: 19, 24, 27 | 4. 38: 16 | 5. 37: 2 & 7-10 | 6. 36: 32 & 34 | 7. 40: 31 | 8. 41: 41: 18 &19 | 9. 43: 4 | 10. 11முறை

Nov19
மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல்

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. எபென் A .பிரசாத்

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்



## பிறந்தநாள் ஆசரிப்போர் Birthday Celebrants

| | |
|---|---|
| 1 Dec | Mstr. Jeffry Immanuel |
| 1 Dec | Mrs. Kalyani Sankaran |
| 2 Dec | Ms. Angelin Sophia Nelson |
| 3 Dec | Dr. G. Alexis Joy |
| 4 Dec | Mr. Abishek |
| 4 Dec | Mstr. Chris Gabriel |
| 13 Dec | Mr. Richard |
| 24 Dec | Mstr. Rishon Yojit |
| 25 Dec | Baby. Haryter Samuel |
| 27 Dec | Mstr. Shelbino Paul |
| 28 Dec | Mrs. Prasana |
| 31 Dec | Ms. M.Angeline Shally |
| 31 Dec | Mr. Sathish Kumar.T |




## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| | |
|---|---|
| 08 Dec | Mr. Alvin Kumar Asirmanns & Mrs. M.Subha |
| 20-Dec | Mr. Joel Santhosh Kumar & Mrs. Helena |
| 27-Dec | Mr. Silvestor Solomon & Mrs. Manjushah |
| 28-Dec | Mr. Herchil Harish & Mrs. Blessy Grace Jonish |
| 28-Dec | Mr. Joel Ranjith Kumar & Mrs. Safeena |
| 29-Dec | Dr. G. Alexis Joy & Mrs. Padma Joy |
| 29-Dec | Mr. M. Nesamony & Mrs. Hepsi Bai |
| 29-Dec | Mr. P. David Raj & Mrs. Vasantha Selva Kumari |
| 29-Dec | Mr. Robert Wilson.T & Mrs. AjiKumari |
| 29-Dec | Mr. Derin Joy & Mrs. Fanny Esther |



**என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.**

நீதிமொழிகள் 9: 11



# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

**CSI Tamil Parish Family No: 078** — **Mobile no: 056 875 2723**

Mr. Joel Santhosh Kumar (Head)

Mrs. Helena Santhosh (Wife)

Baby. Smyrna Syntyche (Daughter)

Location in India:
Aambur, Vellore Dist.
Tamilnadu



**CSI Tamil Parish Family No: 079** — **Mobile no: 0555 628 1237**

Mr. Prabu Dinesh Kumar (Head)

Mrs. Rebecca (Wife)

Location in India:
Kolar District
Karnataka



**CSI Tamil Parish Family No: 080** — **Mobile no: 056 547 3326**

Mr. Sunith Samuel (Head)

Mrs. Shiby Angel (Wife)

Baby. Liana Ann Samuel (Daughter)

Location in India:
Thickanamcode, Nagercoil
K.K Dist.



**CSI Tamil Parish Family No: 076** — **Mobile no: 052 264 0120**

Mr. Vinith J Samuel (Head)

Mrs. Aishwariya (Wife)

Location in India:
Thickanamcode,
Kanyakumari Dist., Tamilnadu



| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம், கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர் குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/- Month | AED 450/- Month |
| இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம். | | |

**DO YOU KNOW?**

**How do you say "Merry Christmas" in Spanish?**

## Feliz Navidad



# DAILY BIBLE READING December – 2019
## "Your word is a lamp to my feet and light for my path"

| Date | Morning / காலையில் | | ✓ | Evening / மாலையில் | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 Peter 3 | 2 பேதுரு 3 | | 1 Chornicles 29 | 1 நாளா 29 | |
| 2 | 1 John 1 | 1 யோவான் 1 | | 2 Chornicles 1 | 2 நாளா 1 | |
| 3 | 1 John 2 | 1 யோவான் 2 | | 2 Chornicles 2 | 2 நாளா 2 | |
| 4 | 1 John 3 | 1 யோவான் 3 | | 2 Chornicles 3 - 4 | 2 நாளா 3 - 4 | |
| 5 | 1 John 4 | 1 யோவான் 4 | | 2 Chornicles 5 | 2 நாளா 5 | |
| 6 | 1 John 5 | 1 யோவான் 5 | | 2 Chornicles 6 | 2 நாளா 6 | |
| 7 | 2 John | 2 யோவான் | | 2 Chornicles 7 | 2 நாளா 7 | |
| 8 | 3 John | 3 யோவான் | | 2 Chornicles 8 | 2 நாளா 8 | |
| 9 | Jude | யூதா | | 2 Chornicles 9 | 2 நாளா 9 | |
| 10 | Rev 1 | வெளி 1 | | 2 Chornicles 10 | 2 நாளா 10 | |
| 11 | Rev 2 | வெளி 2 | | 2 Chornicles 11 -12 | 2 நாளா 11-12 | |
| 12 | Rev 3 | வெளி 3 | | 2 Chornicles 13 | 2 நாளா 13 | |
| 13 | Rev 4 | வெளி 4 | | 2 Chornicles 14 | 2 நாளா 14 | |
| 14 | Rev 5 | வெளி 5 | | 2 Chornicles 15 - 16 | 2 நாளா 15-16 | |
| 15 | Rev 6 | வெளி 6 | | 2 Chornicles 17 | 2 நாளா 17 | |
| 16 | Rev 7 | வெளி 7 | | 2 Chornicles 18 | 2 நாளா 18 | |
| 17 | Rev 8 | வெளி 8 | | 2 Chornicles 19 - 20 | 2 நாளா 19-20 | |
| 18 | Rev 9 | வெளி 9 | | 2 Chornicles 21 | 2 நாளா 21 | |
| 19 | Rev 10 | வெளி 10 | | 2 Chornicles 22 | 2 நாளா 22 | |
| 20 | Rev 11 | வெளி 11 | | 2 Chornicles 23 | 2 நாளா 23 | |
| 21 | Rev 12 | வெளி 12 | | 2 Chornicles 24 - 25 | 2 நாளா 24-25 | |
| 22 | Rev 13 | வெளி 13 | | 2 Chornicles 26 | 2 நாளா 26 | |
| 23 | Rev 14 | வெளி 14 | | 2 Chornicles 27 - 28 | 2 நாளா 27-28 | |
| 24 | Rev 15 | வெளி 15 | | 2 Chornicles 29 | 2 நாளா 29 | |
| 25 | Rev 16 & Luke 2: 1-20 | வெளி 16 லூக் 2 : 1-20 | | 2 Chornicles 30 & Isaiah 9: 1-8 | 2 நாளா 30 & ஏசாயா 9: 1-8 | |
| 26 | Rev 17 | வெளி 17 | | 2 Chornicles 31 | 2 நாளா 31 | |
| 27 | Rev 18 | வெளி 18 | | 2 Chornicles 32 | 2 நாளா 32 | |
| 28 | Rev 19 | வெளி 19 | | 2 Chornicles 33 | 2 நாளா 33 | |
| 29 | Rev 20 | வெளி 20 | | 2 Chornicles 34 | 2 நாளா 34 | |
| 30 | Rev 21 | வெளி 21 | | 2 Chornicles 34 | 2 நாளா 35 | |
| 31 | Rev 22 | வெளி 22 | | 2 Chornicles 36 | 2 நாளா 36 | |


PRIZE

PreSchool
1
Chris Gabriel
PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE


PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE

Primary
PRIZE

PRIZE

PRIZE


PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE

PRIZE



MEN'S
FELLOWSHIP


MEN'S
FELLOWSHIP


MEN'S
FELLOWSHIP


WELCOME
TO OUR CHURCH








MEN'S
FELLOWSHIP


MISSED CALL




MISSED CALL